# எழுதி வளர்ந்த இயக்கம்

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

## 26 சனாதன மறுப்பே சமூக நீதி




'தத்துவமற்ற அரசியலும், அரசியலற்ற தத்துவமும், குறிக்கோள் இன்றிக் கெடும்' என்பார்கள். திராவிட இயக்கத்தைப் பொறுத்த அளவு, இரண்டுமே வலிமையாக இருக்கின்றன என்பது பெருமைக்குரிய ஒன்று!

பேராசிரியர் அ. கருணானந்தன், 'பெரியாரின் தத்துவம்' என்னும் ஒரு நூலை எழுதியிருக்கிறார். 2019- ஆம் ஆண்டு வெளிவந்த அந்நூல், தொடர்ந்து மறுபதிப்புகளைக் கண்டு வருகிறது. சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள கருஞ்சட்டைப் பதிப்பகம் அந்நூலை வெளியிட்டுள்ளது.

1916-ஆம் ஆண்டு, நீதிக் கட்சி என்று அறியப்படும் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' தொடங்கப்பட்ட வேளையில், 'பார்ப்பனர் அல்லாதார் அறிக்கை' (Non-Brahmin Manifesto) என ஒன்று வெளியிடப்பட்டது! அதுவே திராவிட இயக்கத்தின் அடிப்படைத் தத்துவம். ஆனாலும், தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய பிறகு, சமூக நீதி என்னும் ஒரு தத்துவத்தோடு மட்டும் நிறுத்திவிடாமல், தமிழ் இன, மொழி விடுதலை, பகுத்தறிவு ஆகியனவற்றையும் திராவிடத்தின் கருத்தியல்களாக வடித்தெடுத்தார்! அது குறித்து விரிவாகவும், தெளிவாகவும் பேசுகின்ற நூல்தான் **'பெரியாரின் தத்துவம்'** என்னும் நூல் ஆகும்.

### ஆறு கட்டுரைகள்

இந்திய விடுதலையை, காங்கிரஸ் கட்சியும், சர்வதேசிய தொழிலாளர் ஒற்றுமையை, பொதுவுடைமைக் கட்சியும் பேசிக் கொண்டிருந்த நேரத்தில், சமூக விடுதலையை முன்னெடுத்த இயக்கம்தான் திராவிட இயக்கம். ஆதலால்தான் இந்த நூலின் அட்டையில், பெரியாரின் தத்துவம் எது என்பதை ஒற்றை வரியில், 'சனாதன ஒழிப்பே சமூகப் புரட்சி' என்று குறித்துள்ளார் நூலாசிரியர்.

இந்நூல் ஆறு கட்டுரைகளைக் கொண்டிருக்கிறது. அவற்றுள் ஒன்று, 2010-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற, செம்மொழி மாநாட்டில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. பெரியாரின் தத்துவம், 'திணிப்புகளில் இருந்து விடுதலை' என்பது அக்கட்டுரையின் சாரம்.

> **"உழைப்பின் பயனை அந்த உழைப்பாளி அடையாமல், சும்மா இருக்கும் சோம்பேறி அடைவது என்றால், இது எந்த முறையில் நியாயமாகும்?"**

மற்ற கட்டுரைகள், வைக்கம் போராட்டம் குறித்தும், நாராயண குருவுக்கும் பெரியாருக்கும் இடையில் காணப்படும் ஒற்றுமைகள் குறித்தும், திராவிடப் பண்பாட்டு உறவுகள் குறித்தும், விவேகானந்தர் குறித்தும் பேசுகின்றன.

### தமிழ் மரபின் கொள்கை

எந்த ஒரு தத்துவத்துக்குப் பின்னும் அரசியல் உண்டு என்பர். அரசியல் மட்டுமல்ல, எந்த ஒரு தத்துவத்துக்குப் பின்னும், வர்க்க சார்புகளும், சாதி- இனச் சார்புகளும், அவற்றின் மீதான நோக்கங்களும் உண்டு. சார்பற்ற, நோக்கமற்ற தத்துவங்கள் என்று எதுவுமே இருப்பதில்லை என்கிறார் பேராசிரியர் கருணானந்தன்.

**'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என்ற மானுடச் சமத்துவக் கொள்கைதான் தமிழ் மரபு சார்ந்தது. இதற்கு நேர் எதிரான, பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வைக் கற்பிக்கும், வைதீக - பார்ப்பனிய தத்துவத்துக்கு எதிராக எழுந்ததே திராவிட இயக்கம். சுருக்கமாகச் சொன்னால், ஆரியம் என்னும் கருத்துருவுக்கு நேர் எதிரான ஒன்றுதான் திராவிடம்.

இந்த ஆரிய எதிர்ப்பை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முன்னெடுத்தவர் கௌதம புத்தர். "பெருமளவுக்குப் பொருள் முதல்வாதமான புத்தரது தத்துவம், ஒடுக்கப்பட்டுக் கிடந்த வெகு மக்களை ஆட்கொண்டது" என்பார் இ .எம். எஸ். நம்பூதிரிபாத்!


அ.கருணானந்தன்

### புத்தரும் சமூக நீதியும்

மற்ற மதங்களில் காணப்படாத அனான்ம வாதம், அநித்திய வாதம் ஆகியன புத்தர் கோட்பாட்டில் இடம்பெற்றுள்ளன. இவை இரண்டும் பிற்காலத்தில் எழுந்த இயங்கியல் பொருள் முதல் வாதத்தின் (dialectical materialism) முன்னோடிகள் என்று கொள்ளலாம். எனவே, அதன் தொடர்ச்சியாகவே திராவிட இயக்கத்தின் சமூக நீதிக் கோட்பாடு எழுந்துள்ளது, என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அதனால்தான் பெரியாரின் சிந்தனைகளில் பொதுவுடைமைக் கோட்பாட்டின் அழுத்தமும் அவ்வப்போது வெளிப்படுகிறது என்கிறார் கருணானந்தன். "உழைப்பின் பயனை அந்த உழைப்பாளி அடையாமல், சும்மா இருக்கும் சோம்பேறி அடைவது என்றால், இது எந்த முறையில் நியாயமாகும்?" என்று பெரியார் கேட்டதையும், நூலாசிரியர் மேற்கோளாக எடுத்துத் தருகிறார்.

மரபு மறுப்பு - பகுத்தறிவு - ஒடுக்கப்பட்டோர் சார்பு - மாற்றம், முன்னேற்றம் - சம நீதி ஆகியனவற்றை முன்னிறுத்துகிற பெரியாரும், அவரை மையமாகக் கொண்ட திராவிட இயக்கமும், கௌதம புத்தர், காரல் மார்க்ஸ் ஆகியோர் வரிசையில் இடம்பெறத் தக்க தத்துவத்தைத் தந்தவர்கள் என்பதே இந்நூலின் இறுதியான பார்வையாகும்.

-வாசிப்போம்

## :.ப்ளாஷ்பேக்



மாவட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர். 1992-ஆம் ஆண்டு ஜூலை 20 அன்று மயிலாடுதுறை ஏ.வி.சி.திருமண மண்டபத்தில் நடைபெற்ற டாக்டர் ஜே.இராஜமூர்த்தி திருமண விழாவில், தலைவர் கலைஞருடன் என் தாத்தாவும் முன்னிலை வகித்தார். இன்றைக்கு அமைச்சரவையை அலங்கரிக்கும் மூத்த தலைவர்கள் க.பொன்முடி, கே.என். நேரு ஆகியோர் இளைஞர்களாக இருக்கும்போது இப்படம் எடுக்கப்பட்டது.

**-மா.மீ. புகழ். இனியவன், வேதாரண்யம், நாகப்பட்டினம்**


புகழ். இனியவன்

### முத்தமிழறிஞருடன் முன்னிலை!

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை வென்றவர், என் தாத்தா மா.மீனாட்சி சுந்தரம். நாகப்பட்டினம்

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## திராவிட இயக்க இதழ்கள் - 'கைகாட்டி'




முன்னாள் சபாநாயகர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள் ஆசிரியராக இருந்து 1971-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை மதுரையிலிருந்து அச்சாகி வெளிவந்த தனித்தமிழ் மாதம் இருமுறை இதழ், **'கைகாட்டி'**.

இந்த இதழில் ம.இலெ.தங்கப்பா, இறையன், மாகிபை பாவிசைக்கோ, பறம்பை அறிவன், முத்து அரங்கராசன், தி.நா.அறிவு ஒளி, தரங்கை பன்னீர் செல்வம், ஆ.சின்னச்சாமி உள்ளிட்ட தமிழறிஞர்கள் தங்களது படைப்பாக்கங்களைப் படைத்துள்ளனர்.


'வந்து குவிந்த வாழ்த்துகள்' என மூன்றாவது இதழிலேயே நிறைய மரபு வாழ்த்துப் பாக்களை வெளியிட்டுள்ளது.

இதழின் ஒவ்வொரு படைப்புகளும் தனித்தமிழில் இருந்து தமிழுக்கு வளம் சேர்ப்பவையாக இருந்துள்ளன. இதழின் அட்டையிலேயே மரபுக் கவிதை இடம்பெற்று வந்திருக்கிறது. அவை பெரும்பாலும் இதழாசிரியர் எழுதியவையாகவே இருக்கும். கவிதையின் கீழே 'த.கு.' என்ற எழுத்துகள் இடம்பெறும்.

அப்படி வெளியான மரபுப் பா ஒன்று, படத்தில் காணப்படும் 1971-ஆம் ஆண்டு டிசம்பர் 2 தேதியிட்ட இதழில் 'எந்தத் திசையில்...' என்ற தலைப்பில் வெளியாகி உள்ளது. அதைத் தமிழ்க்குடிமகனே எழுதியுள்ளார்.

**"புதுநோக்குத் திரைப்படங்கள்
தோல்வி யேற்க
புலனுணர்ச்சிக் கதைகளெலாம்
காசு சேர்க்கும்
எதுநோக்கம் என்றறியா ஏடு விற்கும்
இலக்கத்தில் தூய்தமிழ்க்காய் எழுந்து நிற்கும்
பொதுநோக்குத் தாளிகைகள் படுத்துப் போகும்
போலிகளோ புகழ்சேர்க்கும் பொருளும் சேர்க்கும்
இதுநோக்கும் நெஞ்சங்கள் எரிந்து சாகும்
எதுதான்நம் திசையென்றே திகைத்து நிற்கும்"**

## அறிவுப் புரட்சியின் அடையாளம்!




வீட்டுக்கு ஒரு நூலகம் அமைக்கப்பட வேண்டும் என கனவு கண்டார் பேரறிஞர் அண்ணா. கழக ஆட்சியின் போதெல்லாம் அந்தக் கனவு உயிர்பெற்று வந்தது. கிளை நூலகங்கள் கிராமப்புற நூலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டன.

நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இந்திய அளவில் ஒப்பிடுகையில், மிக முக்கிய நூலகமான 'கன்னிமரா' தமிழ்நாட்டின் சொத்து. தவிர, தமிழ்நாட்டு அறிவுப் புரட்சியின் பெருமைமிகு அடையாளங்களாக எழுந்து நிற்கின்றன அண்ணா நூற்றாண்டு நூலகமும், கலைஞர் நூற்றாண்டு நூலகமும். இப்படியான அறிவுச் செயல்பாடுகள்தான் இந்திய அளவில் அதிக நூலகம் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. குறிப்பாக, தென்னிந்திய மாநிலங்களான கேரளா, கர்நாடகா மாநிலங்கள் முதல் மூன்று இடங்களில் உள்ளன. வழக்கம்போல உத்தரப்பிரதேசம் ,மத்தியப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் மாநிலங்களில் நூலகங்களின் எண்ணிக்கை இரண்டு இலக்க எண்ணிக்கை அளவிலேயே உள்ளன.

நூலகங்களின் தேவையை கருத்தில் கொண்டு 1972 ஆம் ஆண்டில் பொது நூலக இயக்கத்தை தொடங்கியவர் கலைஞர். கிராமப்புற அளவில் நூலகம் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றன. அரசு நூலகங்கள் மட்டுமல்லாமல், வாசிப்பு இயக்கத்துக்கு ஏற்ப தனியார் நூலகங்களும் தமிழ்நாட்டில் தான் அதிகம். கால மாற்றத்துக்கு ஏற்ப நூலகங்களை நவீனமாக்குவதற்கும் தமிழ்நாடு அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது.


நூலகங்களின் வளர்ச்சியே அந்த சமூகத்தின் நாகரிக வளர்ச்சி, பண்பாட்டு நெறிமுறைகளில் மாற்றம் ஆகியவற்றின் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. மூடநம்பிக்கை பிற்போக்கு வாதம் ஆகியவற்றை உயர்த்திப் பிடிக்கும் ஆட்சியாளர்களோ சமூக வளர்ச்சியை யோசிப்பதே இல்லை என்பதன் அடையாளம் தான் இந்தப் புள்ளிவிவரங்கள். தென் மாநிலங்களின் தெளிவு, வட மாநிலங்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு அறிவுப் புரட்சியை ஆயத்தமாக்கும் திராவிட மாடல் அங்கும் சென்று சேர வேண்டும்.

## கருவூலம்

### தணிக்கை வெட்டு!

**1965-ஆம் ஆண்டு, கலைஞர் எழுதிய 'பூமாலை' என்கிற கதை திரைப்படமாக எடுக்கப்பட்டது. மேகலா பட நிறுவனத்தின் சார்பில், உருவான அந்தப் படத்துக்கு கலைஞரே திரைக்கதை வசனம் எழுதினார். அந்தத் திரைப்படத்தின் தொடக்க விழாவுக்கு, பேரறிஞர் அண்ணா குடும்பத்துடன் வருகை தந்தார். கழக முன்னணியினரும் வருகை தந்து அரசியல் களமாக்கினர். திரைப்படம், திராவிட, நாத்திகக் கருத்துகளை உயர்த்திப் பிடித்ததால், பல இடங்களில் தணிக்கை வெட்டு விழுந்தது. தடைகளை மீறி, அக்டோபர் மாதம் அந்தத் திரைப்படம் வெளியாகி வெற்றிபெற்றது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 189




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.